மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2019-ம் வருடம் டிசம்பர் மாதம் 30-ந் தேதி திட்கள்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.எம்.நாகூர் மீரான் ஒலி, அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

| | |
|---|---|
| 1 | புதியதாக தோற்றுவிக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்ட தொடக்கவிழாவினை முன்னிட்டு இந்நகராட்சி நடைபெற்ற பணிகள் குறித்தும் மற்றும் சாதனைகள் குறித்தும் தினசரி நாளிதழ்களில் 27.11.2019 முதல் 28.11.2019 வரையிலான விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை தினகரன் நாளிதழ் ரூ.9,664/-, தினமலர் நாளிதழ் ரூ.10,773/-, தினத்தந்தி நாளிதழ் ரூ.10,156/- தினமணி நாளிதழ் ரூ.9,975/-, மாலைமலர் நாளிதழ் ரூ.10,080/-, மற்றும் தினச்சூரியன் நாளிதழ் ரூ.9,800/- வரப்பெற்றதன் பேரில் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் மேற்கண்ட நாளிதழ்களுக்கு உரிய தொகையினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2019-20ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட நாளிதழ்களுக்கு உரிய தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:1850/2019/இ1.) |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான பாலார் வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் குடிநீரில் திரவ குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 2019-20-ம் ஆண்டிற்கு திரவ குளோரின் சப்ளை செய்திட மதீப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று 20.02.2019-ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகோரி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், 17,ஏ.ஜி.டி நகர், 2வது தெரு, ஆவடி, சென்னை-54.அவர்களுக்கு வேலைஉத்திரவு வழங்கி பணிமேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 2019-20-ம் ஆண்டில் டெங்குகாய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் குளோரின் அளவு அதிகமாக்கப்படவேண்டும் அதாவது Super Chlorination கொடுக்க வேண்டும் என்ற அறிவுரையின்படி குடிநீரில் குளோரின் அளவு அதிகரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இப்பணியால் 24.12.2019-ம் தேதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிமுடிவடைந்துவிட்டது. மேலும், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி வேலைஉத்திரவு வழங்கிடும் வரை பொதுமக்களுக்கு குடிநீர் பாதிக்கப்படும் என்பதால், ஜனவரி,பிப்ரவரி மற்றும் மார்சு மாதங்களுக்கு தேவையான குளோரின் சப்ளையினை 2019-20-ம் ஆண்டு ஒப்பந்ததாரருக்கே அதே விலை விகிதத்தில் குளோரின் விநியோகம் செய்ய அனுமதிக்கலாம். இப்பணிக்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கு 2019-20-ம் ஆண்டிற்கான ஒப்பந்தஅடிப்படையில் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், 17,ஏ.ஜி.டி நகர், 2வது தெரு, ஆவடி, சென்னை-54.அவர்கள் அளித்துள்ள மதீப்பீட்டு தொகையில் குளோரின் விநியோகம் செய்ய அனுமதிக்கலாம்.<br>3.2019-20ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>4.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(<u>ந.க.எண்:0153/2019/இ1</u>.) |
| 3 | இந்நகராட்சியின் வார்டு எண்.20-ல் உள்ள காகிதக்காரத்தெருவில் கதவு எண்.24-ல் திருமதி.கே.கங்கா, க/பெ.குமரன் என்பவர் நகராட்சியின் இடத்தினை (கால்வாய்) ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்புக் கட்டிடம் கட்டப்பட்டதை, ஆக்கிரமிப்பு அகற்றிட தெரிவித்து இடைநிலை உத்திரவு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மேற்படி நபர் ஆக்கிரமிப்பை அகற்றாமல் வாலாஜாபேட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்:1-ல் வழக்கு 1A No:03/2019 மற்றும் O.S.No:33/2019 தடையாணை பெறப்பட்டதை இந்நகராட்சி வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி தடையாணை தள்ளுபடி செய்து 12.07.2019-ல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பினை பெறப்பட்டது.<br>அதனை தொடர்ந்து மேற்படி ஆக்கிரமிப்பினை 29.07.2019 தேதியன்று காவல்துறை பாதுகாப்புடன் அகற்றப்பட்டது.<br>மேற்படி வழக்கில் இந்நகராட்சியின் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.மாறன்,BA.BL., அவர்கள் ஆஜரானதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)யை வழங்கிட கோரியுள்ளதற்கு மன்றத்தின் பார்வைக்கும், வழக்கறிஞர் கட்டணம் வழங்கிட அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:476/2019/எப்1) |
| 4 | இந்நகராட்சி வார்டு எண்:9-ல் உள்ள கோபால் லே-அவுட்டில் நகராட்சியின் பூங்கா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வருவதை அகற்றிட நகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதில், நகராட்சியை எதிர்த்து வழக்கு எண்:7/2017-ல் இராணிப்பேட்டை சார்புநிலை நீதிமன்றத்தில் மேல்முறையீடு (வழக்கு) தொடர்ந்துள்ளதை எதிர்த்து இந்நகராட்சியின் சார்பாக வழக்கறிஞர் திரு.எம்.மாறன்,BA.BL., அவர்கள் ஆஜராகி வழக்கினை தள்ளுபடி செய்தும் அதற்கான தீர்ப்பினை 17.03.2017-ல் பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராகி வாதாடிய வழக்கறிஞர் திரு.எம்.மாறன்,BA.BL., அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/-யை வழங்கிட கோரியுள்ளதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:1852/93/எப்1) |

| | |
|---|---|
| 5 | இந்நகராட்சியில் பணிகள் அனைத்தும் UTIS S/W தொகுப்பின் மூலம் நடைப்பெற்று வருகின்றது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், வேலூர் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கடித விவரங்கள் அறிந்து எடுப்பதற்கான Internet Connectivity மிகவும் அவசிமாக உள்ளது. இதற்காக RAIL WAY DEPARTMENT மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக 2018-ம் ஆண்டில் இருந்து செயல்படும் நிறுவனத்தின மூலம் இந்நகராட்சிக்கு இணையதள இணைப்பை- RKS CABLE - (Rail wire internet) நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி இணைப்பு பெறப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருவதற்கு 01.01.2019 முதல் 31.12.2019 வரையிலான ஓர் ஆண்டு காலத்திற்கு Rail wire Internet Connectivity கட்டணத்திற்கு ரூ.3600 வீதம் 12 மாதங்களுக்கு மொத்தம் ரூ.43200/- க்கான பட்டியல் வரப்பெறப்பட்டுள்ளதை, மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1)மன்றம் அனுமதிக்கலாம்<br>2)மேற்படி சேவையை Rail wire நிறுவனம் அங்கீகாரம் பெற்ற RKS CABLE அவர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:609/2018/சி1) |

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.